**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். ப. முரளி அர்த்தனாரி Ph.D.,FSKV,
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 21.05.2019

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில்**
**உள் தர மதிப்பீட்டுப் பிரிவு (IQAC)**

எந்த ஒரு நிறுவனத்திற்கும் தரம் ஒருங்கிணைந்த பகுதியாகும் அனைத்து நிறுவனங்களுக்கும் தர மேம்பாட்டிற்க்காக உள் தர மதிப்பீட்டுப் பிரிவை நிறுவ வேண்டியது அவசியம். தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு இயக்குனரகத்தின் மூலமாக இன்று (21.05.2019) அன்று உள் தர மதிப்பீட்டு பிரிவு நிறுவப்பட்டு சிறப்பு கருத்தரங்கு நடத்தப்பட்டது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர், பேராசிரியர் நீ. குமார் அவர்கள் விழாவினை தலைமை தாங்கி சிறப்புரையாற்றினார்.

முனைவர் ப. வனிதா, பேராசிரியர் மற்றும் தலைவர், பொருளாதாரத் துறை, பாரதியார் பல்கலைக்கழகம், அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பல்கலைக்கழக தர மேம்பாட்டிற்காக உள்நாட்டு தர மதிப்பீடு மற்றும் தேசிய தர மதிப்பீடு பற்றி உரை நிகழ்த்தினார். உயிர் தொழில் நுட்பவியல் துறை, முனைவர் எம். இரவீந்திரன், பேராசிரியர், தேசிய தர மதிப்பீட்டிற்கு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் எவ்வாறு தயார்படுத்திக் கொள்ள வேண்டும் என்பது குறித்து பேசினார்.

கல்லூரி முதன்மையர் மற்றும் பேராசிரியர்கள், முன்னாள் மாணவர்கள், நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் இந்த நிகழ்வில் கலந்துக் கொண்டனர். முன்னதாக, முனைவர் ஜெ. வெங்கிட பிரபு, இயக்குநர், திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு இயக்ககம் வரவேற்புரையாற்றினார். முனைவர் ஆர். கல்பனா, இணைப்பேராசிரியர், உழவியல் துறை, அவர்கள் நன்றியுரை நல்கினார்.

மக்கள் தொடர்பு அலுவலர்